ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF MASS MEDIA

163, ඇසිදිසි මැදුර, කිරුළපන මාවත, පොල්හේන්ගොඩ, කොළඹ 05.
163, அசிதிசி மெதுர, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05.
163, Asidisi Medura, Kirulapone Mawatha, Polhengoda, Colombo 05.

මගේ අංකය / எனது இல. / My No. MMI/AD02/02/01-02/2022    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date

**வெகுசன ஊடக அமைச்சில் காணப்படுகின்ற இலங்கை கணக்காளர் சேவையின் பிரதான உள்ளக கணக்காய்வாளார் பதவி வெற்றிடம்**

மேற் கூறப்பட்ட பதவிக்கு நியமிப்பதற்காக இலங்கை நிர்வாக சேவையின் I தர தகைமை வாய்ந்த அதிகாரிகளிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடமொன்று காணப்படுகிறது.

1. **பிரதான உள்ளக கணக்காய்வாளார்**

சேவையின் I தர அதிகாரிகளின் விண்ணப்பங்கள் இல்லாது இருப்பின், அப்பதவிகளுக்காக முழு நேர அடிப்படையில் பணிகளை மேற்கொள்கின்ற குறித்த சேவையில் 10 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான பதவிக் காலத்தினை கொண்ட II தர அதிகாரிகளிடத்திலிருந்து குறித்த பதிவியினை மீள்நிரப்புவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

பதவியில் பணிகளை மேற்கொள்வது ஆகக் கூடியது ஒரு வருட காலத்துக்கு என்பதுடன் பொதுச் சேவை ஆணைக்குழுவின் சேவை பிரமாண இலக்கம் 121 அடிப்படையில் அதன் பின்னர் சேவை நீடிப்பதற்கான அவகாசம் காணப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக்கோவையொன்றினை பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இல் காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பத்தின் அடிப்படையில் தயாரித்து திணைக்கள தலைவரின் ஊடாக 2023 ஆகஸ்ட் 04ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு கிடைப்பதற்கு ஆவணம் செய்ய வேண்டும். admin@media.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு முதலில் மென் (Softcopy) விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பி வைப்பதுடன் பின்னர் வன் (Hardcopy) விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைக்க வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மற்றும் உரிய முறையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் **எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

2.0 **விண்ணப்பதாரியின் சுயவிபரம்**

2.1. **அனுபவமும் தொழிற்றகைமைகளும்**

i. குறித்த விடயப் பரப்பில் குறைந்தது 03 வருடங்கள் அனுபவம் இருத்தல்.
ii. இலங்கை நிருவாக சேவை யாப்பில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போன்று முதுகலை தகுதி (Postgraduate qualification) காணப்படல்.
iii. ஆங்கில மொழியில் தேர்ச்சி
iv. ஊடகத் துறையுடன் தொடர்பான நிறுவனமொன்றில் 02 வருடங்கள் அல்லது குறைந்தது அனுபவத்தினை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

2.2. **பலங்கள்**

i. குழுச் செயற்பாடு
ii. பணியில் அதிக கவனம் செலுத்துதல்
iii. செயற்றிறன்

2.3. **நடத்தையில் நிபுணத்துவம்**

i. தலைமைத்துவம்
ii. வெற்றிகரமாக முடிவுகளை எடுத்தல்
iii. சுய அபிவிருத்தி மற்றும் ஏனைய பணியாளர்களின் அபிவிருத்தி

3.0. **தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை**

சிரேஷ்ட நிலைகளின் அடிப்படையிலான மதிப்பீடுகளின் கீழ் விண்ணப்ப படிவம் மற்றும் நேர்முகத் தேர்வின் ஊடாக பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். நேர்முகத் தேர்வுக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளே அழைக்கப்படுவர்.

3.1. **புள்ளிகள் வழங்கப்படும் முறைமை**

| **விடயம்** | **அதிகூடிய புள்ளிகள்** | **மதிப்பிடப்படும் செயன்முறை** |
|---|---|---|
| **சிரேடநிலை**<br><br>சிரேஷ்ட நிலையில் கூடிய விண்ணப்பதாரிக்கு அதி கூடிய புள்ளிகள் வழங்கப்படுவதுடன் ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு தத்தமது சிரேஷ்ட நிலைகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | 50 | விண்ணப்பபடிவம்/நேர்முகத் தேர்வு |
| **குறித்த துறையில் அனுபவம்**<br><br>ஊரிய துறையில்/உரியவிடயம் தொடர்பிலான அறிவின் அளவிற்கு மேலதிகமாக உரிய துறையில் பணியாற்றி அல்லது அனுபவத்தினை பெற்று அடைந்துக் கொண்ட அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் அளவு.<br><br>(வெற்றிடம் காணப்படுகின்ற பதவிகளுக்குரிய துறைகளில் அனுபவம் கட்டாயமாக இருத்தல் அவசியமன்று. எனினும், அதிகாரி | 20 | |

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் பெற்றுக் கொண்ட அனுபவத்துடன் கூடிய துறைகள் தொடர்பிலான பட்டியலும் கவனத்திற் கொள்ளப்படும். (உதாரணமாக. கிராமிய அபிவிருத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்தி, சமூகசேவை போன்ற பிரிவுகளில் பணிபுரிந்த அதிகாரியொருவர் மாகாண மட்டத்திற்கு இடமாற்றம் பெறும் போது அனுபவம் பெற்றிருப்பதை குறிக்கின்றது) | | |
| **தொழிற்றகைமைகள்/ஆய்வுகள் மற்றும் கண்டு பிடிப்புகள்**<br><br>1. இலங்கை நிர்வாக சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதுகலை தகைமைகள்<br><br>அ. ஆய்வினை மையப்படுத்திய முதுகலைபட்டங்கள் - 07 புள்ளிகள்<br>ஆ. முதுகலைபட்டப் படிப்புதுறையுடன் தொடர்புடையது – 06 புள்ளிகள்<br>இ. முதுகலைபட்டப்படிப்பு – 04 புள்ளிகள்<br>ஈ. பட்டப்படிப்பு சான்றிதழ் - 02 புள்ளிகள்<br><br>2. உரிய துறையில் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்<br>அ. மூன்று மாதங்கள் அல்லது அதற்கு மேலான பயிற்சிகள் - 01 புள்ளி<br>ஆ. 10 நாட்கள் அல்லது அதற்கு மேலான பயிற்சிகள் - 0.5 புள்ளிகள்<br>இ. மூன்று நாட்கள் அல்லது அதற்கு மேலான பயிற்சிகள் - 0.2 புள்ளிகள்<br><br>3. ஆங்கிலமொழியாற்றல்<br>அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தின் பயிற்சி நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா சான்றிதழ்/IELTS பயிற்சியில் 6.5 சராசரி புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல், TOEFL – CBT 213 அல்லது அதற்கும் மேல், அல்லது TOEFL-PBT அல்லது அதற்கும் மேல் - 02 புள்ளிகள்<br><br>ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தின் பயிற்சி நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட சான்றிதழ்.– 01 புள்ளி<br><br>மேற்கூறப்பட்ட தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் சேர்த்துக் கொள்ளப்படும். | 10 | |
| **பலங்கள்** | 10 | நேர்முகத் தேர்வு |

| | | |
|---|---|---|
| வெற்றிகரமாக செயற்பட வேண்டும் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட 2.2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று விண்ணப்பதாரி தொழிற்படல் வேண்டும். | | |
| **நடத்தையில் நிபுணத்துவம்**<br><br>வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் மற்றும் பணிகள் மேற் கூறப்பட்டுள்ள 2.3 இல் உள்ளவாறு அமைதல் வேண்டும். | 10 | |

குறிப்பு 01:

“அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்” என மேலே குறிப்பிடப்பட்டிருப்பது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களாகும்.

குறிப்பு 02:

மேற்குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கும் திட்டத்தின் காணப்படுகின்ற அனைத்து முதுகலைபட்ட தகைமைகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வேறுபட்டங்கள் வழங்குகின்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பட்டங்கள் யாவும் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**வெகுசன ஊடக அமைச்சு,**
**“அசிதிஸி மெதுர”**
**இல. 163,**
**கிருலபனை அவனியு, பொல்ஹேன்கொட,**
**கொழும்பு– 05.**